


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் (30.12.2025 )அன்று நடைபெற்ற விழாவில் காணொலி காட்சி வாயிலாக மாநகராட்சி,நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வ.உ.சி.உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வஹாப் எம்.எல்.ஏ., மேயர்.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா, துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் நெல்லை மாநகராட்சி, நகராட்சிகள்,பேரூராட்சிகளில் உள்ள வார்டுகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ் உள்பட பலர் உள்ளனர்.

### மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. — மேயர் கோ.ராமகிருஷ்ணன் பங்கேற்பு!

# நெல்லையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் பணி!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, ஜன.1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் (30.12.2025) அன்று நடைபெற்ற விழாவில் காணொலிக் காட்சி வாயிலாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வ.உ.சி.உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் திருநெல்வேலி மாநகராட்சி, மூன்று நகராட்சிகள்,17 பேரூராட்சிகள் என மொத்தம் 397 வார்டுகளுக்கு 576 கலைஞர் விளையாட்டு உபகரணங் களை வழங்கினார்.

இந்நிகழ்வில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்த தாவது.

உலகளவில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை தமிழகத்திலிருந்து உருவாக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்கள்.தமிழக வரலாற்றில் இல்லாத அளவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு தனி கவனம் செலுத்தி, அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து மாணவ, மாணவியர்களை ஊக்குவிப்பதற்காக பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 204 ஊராட்சிகளுக்கு கிரிக்கெட் பேட், ஸ்டெம்பு, பந்து,வாலிபால், கால்பந்து, எரிப்பந்து,டென்னிஸ்,கேரம்போர்டு, சிலம்பம், செஸ்,இறகுப்பந்து போன்ற 33 வகையிலான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2024-2025ஆம் நிதியாண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் மானியக் கோரிக்கையின் போது “டாக்டர் கலைஞர்” விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்தி அனைத்து மாநகராட்சி,நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, தற்போது மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் பணியினைதுணை முதலமைச்சர் அவர்களால் ஈரோடு மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி மாநகராட்சி யிலுள்ள 55 வார்டுகளுக்கு 165 விளையாட்டு உபகரணங்களும்,3 நகராட்சிகளிலுள்ள 69 வார்டுகளுக்கு 138 விளையாட்டு உபகரணங்களும்,17 பேரூராட்சிகளிலுள்ள 273 வார்டுகளுக்கு 273 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் என மொத்தம் 397 வார்டுகளுக்கு கிரிக்கெட் பேட், ஸ்டெம்பு,பந்து,வாலிபால், கால்பந்து, எரிப்பந்து,டென்னிஸ்,கேரம்போர்டு, சிலம்பம்,செஸ், இறகுப்பந்து போன்ற 576 விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் பணிகளை துவக்கி வைத்ததில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.அனைத்து வீரர், வீராங்கனைகள், மாணவ, மாணவியர்கள் சிறப்பாக விளையாடி சர்வதேச தரத்தில் விளையாட்டில் சாதனைபுரிய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் விஜய லெட்சுமி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் கிருஷ்ண சக்கரவர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ் உட்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்,வீராங்கனைகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கரூர் அரசு கலைக் கல்லூரியில்

# மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், ஜன.1-

கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, கரூர் தாந்தோன்றிமலை அரசு கலைக்கல்லூரியில் மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமினை துவக்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மணி தங்கவேல் தலைமை வகித்தார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறை வளர்ச்சி மேம்பாடு அடையச்செய்யும் நோக்கோடு உலகத்தின் பல நாடுகளுக்கும் சென்று பல்வேறு தொழில் முதலீடுகளை ஈர்த்து, அதன் மூலம் பல லட்சக்கணக்கான நபர்களுக்கான வேலைவாய்ப்பினை பெற்று தந்துள்ளார்கள். பல்வேறு புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி வருகிறார்கள். இந்தியாவிலேயே உழைக்கும் மகளிருக்கான தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் உருவாக்கி 43 சதவிதமாக உயர்த்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு துறையில் விளையாட்டுவீரர்கள் - வீராங்கனைகளுக்கு ஊக்கதொகைகளை வழங்கி, ஊக்கப்படுத்தி இந்தியாவிலேயே விளையாட்டு தலைநகரமாக சென்னையை மாற்றி வருகிறார்கள். தனியார் துறைகளில் மட்டுமின்றி அரசு துறைகளில் உள்ள காலி பணியிடங்களை நிரப்புவதற்காக பல்வேறு போட்டிதேர்வுகளையும் நடத்தி வருகிறார்கள். கரூர் மாவட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வருபவர்களுக்கு ஏதுவாக திருவள்ளுவர் மைதானத்தில் புதிய நூலக கட்டடம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் பசுபதீஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அறிவு சார் மையங்கள் மற்றும் நூலக கட்டடங்களையும் ஏற்படுத்தி பயன் அடைந்து வருகின்றனர்.

கரூர் மாவட்டத்திற்கு மட்டும் சாலை, மழைநீர் வடிகால், குடிநீர் மேம்பாலம் தெருவிளக்கு உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.4.500 கோடி மதிப்பிலான நிதிகளை வழங்கியுள்ளார்கள். பல்வேறு தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் மாநில அளவில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் 56 சிறிய அளவிலான தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்களும், பெரிய அளவிலான தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்களும், நடத்தி 2052 முன்னணி வேலையளிக்கும் நிறுவனங்கள் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பினை அளித்துள்ளது.

இன்றைய தினம் நடத்தப்பட்ட மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 157 முன்னணி வேலையளிக்கும் நிறுவனங்கள் பங்கேற்று வேலை வாய்ப்பினை அளித்துள்ளன. பணி நியமன ஆணை பெற்றவர்கள் இதோடு நின்றுவிடாமல் மேலும் வெற்றியடைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு வி.செந்தில் பாலாஜி பேசினார்.

இம்முகாமில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணாபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா. துணை மேயர் ப.சரவணன், வேலைவாய்ப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜோதிமணி, மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, மகளிர்திட்ட இயக்குநர் தனசேகரன், வேலைவாய்ப்பு உதவி இயக்குநர். ராதிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்.ஜோதி, தாந்தோன்றிமலை அரசு கலைக் கல்லூரி முதல்வர் சுதா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்பி.கனகராஜ், ஆர்எஸ். ராஜா, சக்திவேல், அன்பரசு மற்றும் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலையில் திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்களின் ஆட்சியின் சிறப்பை ஏற்றுக்கொண்டு இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி மண்டபம் மத்திய ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட 50–க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் மற்றும் மகளிர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் ஏற்பாட்டில் அவனியாபுரம் பகுதி மக்கள் பத்தாயிரம் பேருக்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையேற்று பகுதி செயலாளர் போஸ் ஈஸ்வரன், திருப்பரங்குன்றம் தொகுதி பொறுப்பாளர் சிவகாசி வனராஜா ஆகியோர் முன்னிலையில் பிரமாண்டமான கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் வட்டச் செயலாளர் நேதாஜி ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் குட்டி என்ற ராஜரத்தினம், ஒன்றிய செயலாளர்கள் தங்கபாண்டியன், தனபால், மதன்குமார், இளைஞர் அணி காளீஸ், கழக நிர்வாகிகள் கருணாநிதி, குமார், வில்வமணி மற்றும் வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், கழகத்தினர், பொது மக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்,

### முகம்மது மீரான் மைதீன் ஏற்பாடு!

# துணை முதல்வர் பிறந்த நாள் - 49 ஆட்டோ ஓட்டுனர்களுக்குச் சீருடை வழங்கும் விழா!

## டி.பி.எம். மைதீன்கான் — மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.— இன்பா ஏ.என்.ரகு பங்கேற்பு!

நெல்லை,ஜன.1-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்தநாளை முன்னிட்டு மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லி.முகம்மது மீரான் மைதீன் ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட 49 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை,1049 மாநகராட்சி களப்பணியாளர்களுக்கு நலத்திட்டம், 4049 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட முன்னாள் அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர், நெல்லை மத்திய மாவட்ட முன்னாள் பொறுப்பாளர், கழக மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன் கான் தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு பங்கேற்று சீருடை, நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,அறுசுவை உணவையும் வழங்கி துவக்கி வைத்தார்.

நிகழ்வில் தலைமைக் கழக தீர்மானக் குழு தலைவர் சு.ப. சீதாராமன்,மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜி லாசத்தியானந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் (எ) கிட்டு, துணை மேயர் கே. ஆர். ராஜு, மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மாநகர துணை செயலாளர் வி. எஸ். அப்துல்கையூம், மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதி கழக செயலாளர்கள் துபாய் சாகுல், நமச்சிவாயம் (எ) கோபி,சாமுவேல், அன்டன் செல்லத்துரை,ஒன்றிய செயலாளர்கள் அருள் மணி,மாரியப்பன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க. மணி,முன்னாள் மாவட்ட பொருளாளர் பா.அருண்குமார்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,துணை அமைப்பாளர்கள் பி.எம்.சரவணன்,கோ. மிக்கேல்,அலிப் மீரான்,குரு ஜெசி,இனியன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கல்லூர் பாலா,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் தொப்பி மைதீன், மாவட்ட ஆதி திராவிடர் நல குழு அமைப்பாளர் நவநீதன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கருப்பசாமி செல்வம், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் நவ்ஷாத்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சின்னத்துரை,

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் சேக் தாவூது, அமீரக அயலக அணி அமைப்பாளர் துபாய் மீரான், மாவட்ட விவசாய அணி தலைவர் போத்திக் கண்ணு,மாவட்ட அமைப்பு சாரா அணி தலைவர் பரமானந்தம் மாரியப்பன் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் கணபதி,முத்து மாரி, விலாகம் பாலு,கொம்பையா, மாவட்ட தொழிலாளர் அணி பழனி,மாவட்ட இலக்கிய அணி துணை தலைவர் தங்கபாண்டி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர்கள் கிறிஸ்து ராஜா, பேச்சி முத்து, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ரூசோ, ஜெயச்சந்திரன், மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர்கள் சேக் மைதீன், ராஜாக்கனி,ஜமீலா காஜா, தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம்,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கந்தசாமி, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சாகுல் ஹமீது, கேபிள் ராஜ், சங்கரலிங்கம், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சீனிவாசன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் ரேவதி அசோக், பூங்கனி, லதா, பிந்து யாஸ்மின், சார்லி, சித்ரா பௌர்ணமி,சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அந்தோணி,மாநகர இலக்கிய அணி தலைவர் ராஜேஸ்வரி, ஒன்றிய,பகுதி இளைஞரணி நிர்வாகிகள் மகாராஜன்,விக்னேஷ் ,சூரத் ராம் சேட், மணிகண்டன், ராஜு,பிரபு,ராஜா,ஒன்றிய நிர்வாகிகள் சூட்சார், குருச்சிகுளம் இஸ்மாயில்,பீர் மைதீன்,மிர்சா,மாவட்ட பிரதிநிதிகள் கார்டன் சேகர், சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் சுந்தர், நித்தியபாலையா,கந்தன், வட்ட செயலாளர்கள் ஆவின் கல்யாணி, அந்தோணி ராஜ்,பத்மராஜ், படப்பை மனோகரன்,மனோகரன்,செந்தில் முருகன்,புயல் மீனாட்சி, மேகை செல்வம், தளவாய்,பால மகேஷ், ஆறுமுகம்,அருள் சுந்தரராஜ், மாரிமுத்து, மணிகண்டன், ஆறுமுக பாண்டியன்,சிந்து முருகன், லெனின்,முத்துராமன்,சடாமுனி, தொ.மு.ச. நிர்வாகிகள் சைபுதீன், விஷ்ணு, சுந்தரம், வெங்கடேஷ், தச்சநல்லூர் வெங்கடேஷ்,குட்டி, அகஸ்டின்,டாஸ்மாக் ,மெடிக்கல் சுரேஷ், மேலப்பாளையம் பிரோஸ் கான்,ஆண்டி குமார்,பிச்சையா,அலி,கன்னையா பாண்டியன்,மதன் முருகன்,ஆறுமுகம், முருகன்,எஸ்.டி.நாதன் மற்றும் பயனாளிகள், பொதுமக்கள்,முன் களப்பணியாளர்கள்,கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகம்மது மீரான் மைதீன்செய்திருந்தார்.

### போத்துவாய் ஊராட்சியில்

# என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச் சாவடி பரப்புரை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜன.1-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் போத்துவாய் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமையில்நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடிதிமுகவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் பரப்புரையை தொடங்கி வைத்துதிராவிட மாடல் அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொது மக்களிடம்வழங்கி பரப்புரையை மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன்,ஒன்றிய கவுன்சிலர் பூங்காவனம் ராமசாமி,ஊராட்சி மன்ற தலைவர்ரங்கநாயகி குபேந்திரன், ஒன்றிய அவைத் தலைவர் வாசு,மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை, கதிரவன்ஊராட்சி கழக நிர்வாகிகள் குழந்தைவேலு, அண்ணாதுரை, ரவீந்தர், சாமிதுரை தசாவரதன், ராஜாராமணி, ஏழுமலை, பாண்டியன், அலெக்ஸ் பாண்டியன் உள்ளிட்ட வாக்குச்சாவடி முகவர்கள், டிஜிட்டல் பூத் ஏஜென்ட் நிர்வாகி கள்,பூத் கமிட்டி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நெல்லை மேற்கு மாநகர தி.மு.க.சார்பில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று கோரிக்கையை நிறைவேற்றும் அடிப்படையில் மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் டவுண் பாறையடி நகர்ப்புற நல்வாழ்வு மையத்திற்கு குளிர்சாதன பெட்டி (Fridge) வழங்கும் நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்று நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி,15வது வட்ட பொறுப்பாளர் மணிகண்டன்,டாக்டர் தீபா மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் வழங்கினார். நிகழ்வில் ஊர் நாட்டாமைகள் வள்ளிநாயகம்,பாப்பா குமார்,கழக நிர்வாகிகள் லெனின், சரவணன், சேர்மத்துரை,மாடசாமி, சுரேஷ், ஷெட்டி, மகாராஜன்,கிருஷ்ணகுமார், கார்த்திக்,சங்கர் கணேஷ்,முருகன், ராஜேஸ்வரி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.